**வெல்லவாய பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 28 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெல்லவாய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 02 வேலைகள் மற்றும் 15 பொருள் உதவிகள் வழங்குவதற்காக ரூபா 2,027,364 தொகையான கடன்பட்டோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட 02 வேலைகளுக்குரிய ரூபா 1,766,578 தொகையான கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடும் ஒதுக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 24,861 தொகையான மீண்டெழும் செலவினம் கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 117,000 தொகை மற்றும் ஒக்தோபர் முதல் திசெம்பர் வரை நூலகர் பதவியின் பதில் கடமைக்காக ஊவா மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 12,313 தொகை என்பன கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (iv) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 02 வேலைகளுக்காக ரூபா 40,711 தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (v) | சபைக்குச் சொந்தமான 65 காணிக் கூறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (vi) | முன்னைய ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 430,990 தொகையான விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (vii) | முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் முறையே ரூபா 57,000 மற்றும் ரூபா 27,000 தொகையான தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக கிடைக்க வேண்டிய வியாபார வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (viii) | மீளாய்வாண்டின் பெப்ரவரி 05 ஆந் திகதி நன்கொடையாகக் கிடைத்த குழாய்க் கிணறு பழுதுபார்க்கும் வேலைத் தொகுதியின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |
| (ix) | இனங்காணப்படாத வருமானம் மற்றும் பல்வேறு தரப்பினர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 398,173 தொகையை இனங்கண்டு உரிய கணக்குகளின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்கு விடயங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கி சரிசெய்யப்படும். |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு எதிராக 04 வெளித்தரப்பினர்களால் 06 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பாக வெளிப்படுத்தப்படும். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொதுப்பேரேட்டின் பிரகாரம் வேலை முற்பணக் கணக்கில் ரூபா 545,572 தொகையான பொறுப்பு மீதியொன்று இருந்த போதிலும், வேலை முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 10,914 ஆனமையால் ரூபா 534,658 வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 10,914 தொகையான வீதியொன்றிற்கு கொங்கிறீட் இட்டு சிறுகற்கள் பதிப்பதற்காக தரப்பரிசோதனை அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது பொருத்தமற்றதாக இருந்தமையால் வேலைகளை அமுல்படுத்த முடியாதிருந்ததுடன் ரூபா 534,658 தொகையான கொங்கிறீட் சிறு கற்களை கொள்வனவு செய்வதற்கு செலுத்த வேண்டிய தொகையாகும். வழங்குனர் தொடர்பான சரியான தகவல்கள் இன்மையினால் செலுத்துவதற்கு முடியாதுள்ளது. |

(ஈ) **கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 184,980,401 தொகையான 03 கணக்கு விடயங்கள் மற்றும் ரூபா 36,710 தொகையான பொறுப்பு விடயம் என்பவற்றுக்குரிய நிலையான சொத்துப் பதிவேடு, வருமானப் பதிவேடு, பட்டோலை மற்றும் தனிப்பட்ட மீதிகள் சமர்ப்பிக்கப்படாமை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கும் தனிப்பட்ட மீதிகளின் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| | 140 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடுவதற்காக ஆதனங்கள் காலரீதியில் மதிப்பீடு செய்யப்படாமல் 2012 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>------------------------------<br>XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | ஒரு வருடத்தை விட மேற்பட்ட காலம் முதல் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற சபையில் சேவையாற்றிய 56 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 132,598 தொகையான ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த ஊழியர்கள் தற்போது சேவையில் இல்லாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு அனுப்பி விடயப்பொறுப்பு அமைச்சர் ஊடாக மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 46 கட்டிட திட்டங்களுக்குரிய நிர்மாணங்களைப் பரீட்சித்து தரச் சான்றிதழ் விநியோகிக்கப்படவில்லை | வர்த்தமானியின் பிரகாரம் நிர்மாணங்களைப் பரீட்சித்து தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட வேண்டும். | சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு எழுத்து மூலம் அறவிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு பகுதிக்கு தற்போது விநியோகிக்கப் பட்டுள்ளது. களப் பரிசோதனை செய்து ஏனைய சான்றிதழ்களையும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு
------------------------

### 2.1 நிதி விளைவுகள்
------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,066,419 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,984,246 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,055,383 | 6,046,520 | 2,234,194 | 3,812,326 | 6,100,000 | 6,052,614 | 2,508,700 | 3,543,914 |
| (ii) | வாடகை | 15,600,000 | 10,443,422 | 7,066,285 | 3,377,137 | 14,620,000 | 10,686,712 | 8,687,680 | 1,999,032 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,150,000 | 1,011,150 | 1,011,150 | - | 900,000 | 1,247,527 | 1,247,527 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,759,150 | 1,665,345 | 1,665,345 | - | 1,500,000 | 812,486 | 812,486 | - |
| | மொத்தம் | 24,564,533 | 19,166,437 | 11,976,974 | 7,189,463 | 23,120,000 | 18,799,339 | 13,256,393 | 5,542,946 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 19,166,437 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரையிலும் ரூபா 7,189,463 தொகை அதாவது 37 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வருமானப் பரிசோதர்களின் பிரச்சினையான நிலைமை மற்றும் நிர்வாக மாற்றங்களின் அடிப்படையில் வருமானம் சேகரித்தல் குறைவடைந்திருந்ததுடன் குழுவாக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி வருமானம் சேகரிக்கப்படுகின்றது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1986 ஆம் ஆண்டின் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடுவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக நிர்ணயித்து ஆதனவரித் தொகை அறவிடப்பட | வருமானப் பரிசோதகர் இன்மையினால் வருமானப் பிரிவின் வேலைச் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் ஆதனவரி அதிகாரப்பிரதேசத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டும். | விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஆதனவரிகளில் இருந்து விலக்களிக்கக் கூடிய பொது சமய, புண்ணிய, கல்விசார் மற்றும் வீட்டு ஆதனங்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படவில்லை. | ஆதனவரி விடுதலை பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதிவேடொன்று தயாரிக்குமாறு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | பிரதேச சபை ஆதனவரி அதிகாரப் பிரதேசத்தில் திட்டமிடல் குழுவின் அங்கீகாரம் பெற்று நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்திற்காக வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படவில்லை. | வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனவரி அலகுகளை இனங்காண்பதற்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்காக ஆதனவரி மதிப்பீடு செய்து அறவிடுவதற்கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 8,934,365 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 7,094,802 தொகை அதாவது 79 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | வருமானப் பரிசோகரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான உத்தியோகத்தர் இல்லாதிருந்தமையும் ஆதனவரி, மதிப்பீட்டிற்காக வரியிறுப்பாளர்களினதும் வியாபாரச் சங்கத்தினதும் எதிர்ப்பின் காரணமாகவும் ஆதனவரி அறவிடும் முன்னேற்றம் குறைவடைந்திருந்தது. |
| (உ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 6,046,520 தொகையான ஆதனவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,812,325 தொகை அதாவது 63 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | 2018 இன் நிலுவை மற்றும் அதற்கு முன்னருள்ள நிலுவை என்பவற்றை அறவிடுவதற்கு விசேட குழுவொன்று அதிகாரப்பிரதேசங்களை 4 பகுதிகளாகப் பிரித்து பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 ஆதன வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 13 ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் அறவிட வேண்டிய மீதி ரூபா 4,893,748 ஆக இருந்தது. | நிலுவை வாடகைப் பணம் அறவிடப்பட வேண்டும். | தற்போது பல வருட காலத்திற்கு முன்புள்ள நிலுவையை அறவிடுவதற்கு முன்னாள் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அண்மைய வருடங்களின் சகல வாடகைப் பணத்தையும் அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகளின் மூலம் அறவிடப்படும். |

### 2.2.5 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 94 கடைகளில் இருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,796,240 தொகையான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | பேருந்து நிலையம் மற்றும் நவீன சந்தைக் கட்டிடத்தொகுதி என்பவற்றில் சில கடைகள் வாடகைக்கு வழங்க முடியாமல் மூடிவைக்கப்பட்டிருந்ததுடன் கடை வாடகை மதிப்பீட்டிற்கு கடை உரிமையாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தமையால் வாடகை செலுத்தும் முன்னேற்றம் குறைவடைந்திருந்தது. வருமானப் பரிசோதகரின் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் நிலுவையை அறவிடல் குறைவடைந்திருந்ததுடன் வாடகை செலுத்தாத கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.6 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப்பிரதேச்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களுக்குரிய 19 தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து முன்னைய ஆண்டிற்காக ரூபா 57,000 தொகையும் மீளாய்வாண்டிற்காக ரூபா 27,000 தொகையுமாக அறவிட வேண்டிய ரூபா 84,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் பணம் அறவிடப்படும். |

### 2.2.7 நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப்பிரதேச்தில் 08 நிறுவனங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 10 பதாதைகளுக்காக முன்னைய ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 430,990 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு வருமானப் பரிசோதகருக்கு அறிக்கை கிடைக்காதிருந்ததுடன் தற்போது நகரத்தில் முழுமையான மெய்மையாய்வை மேற்கொண்டு அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.8 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக முன்னைய ஆண்டில் ரூபா 614,820 தொகையும், மீளாய்வாண்டில் ரூபா 73,500 தொகையுமாக | நிலுவை இயந்திர வாடகை அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் நிலுவைத் தொகையில் ரூபா 59,500 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அறவிட வேண்டிய ரூபா 686,320 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும். முன்னைய ஆண்டுகளின் நிலுவையை அறவிடுவதற்கு கோவைகள் பரீட்சிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தகவல்கள் அறிவிக்கப்படும். |

**2.2.9 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,637,154 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 4,877,459 தொகையும் காணப்பட்டன. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவடுவதற்குத் தேவையான பட்டோலைகள் தயாரிக்கப்படுகின்றமையால் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2018 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண பட்டோலை தயாரித்து சமர்ப்பிக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 07 விடயங்களுக்காக உப விதி விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உப விதி விதிக்கப்பட வேண்டும். | மிகுதி 7 விடயங்களை அமுல்படுத்துவதற்காக வரைவு விதி தயாரிக்கப்படுகின்றது. |

## (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்காக கடமைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## (இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | பிரதேச சபையினால் கழிவுப் பொருட்கள் அகற்றிப் போடப்படுகின்ற ஆனபல்லம காணியை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உக்கும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணியைக் கைப்பற்றி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதியை வழங்குவதற்கு இணங்கியிருந்தமையால் கழிவுப் பொருள் தளத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு மின்வேலியொன்றும், காணியைச் சுற்றி வடிகாண்களையும் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ii) | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற வணிகப் பெறுமதியுடைய கழிவுப் பொருட்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் முறையான திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | வணிகப் பெறுமதியுள்ள கழிவுப் பொருட்களை பதிவேடுகளுக்குக் கொண்டு வருவதற்கும் விற்பனை செய்வதற்கும் முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் தளம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கழிவுப் பொருட்களை வேறுபடுத்திக் கொள்வதற்கும் அதன் பின்னர் பதிவேடுகளுக்குக் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | சில உத்தியோகத்தர் களுக்கு அறிவித்திருந்த போதிலும், அது தொடர்பாக சரியான அனுபவம் இல்லாமையால் இலக்கு மற்றும் நோக்கங்களை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஜே.எம். குமாறதாச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் 03 வருடங்கள் அளவிலான காலம் பயன்பாட்டிற்கு எடுக்காமல் காணப்பட்டமையால் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமையினால் உடைந்த நிலையில் காணப்பட்டது. | பராமரிப்பு நடவடிக்கைகளைச் செய்து பயன்பாடுள்ள பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். | உரிமையாளர் தனிப்பட்ட ரீதியில் முகங்கொடுத்து அவரின் பொருட்களை அகற்றுமாறு அறிவித்துள்ளதுடன் அவ்வாறு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது விடின் சட்டமா அதிபரிடம் விசாரித்து எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) பிரதேச சபைக்குரிய நவீன சந்தைத் தொகுதியின் 12 கடைகள் மற்றும் பேரூந்து தரிப்பிட மேல்மாடியின் 03 கடைகள் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடைகளை வாடகைக்கு வழங்குவதற்குத் தேவையன நடவடிக்கைகள் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துடன் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதேச சபையின் மூலம் 2016 இல் நிர்மாணிக்கப்பட்ட மஹவெலமுல்ல வீடமைப்புத் தொகுதியின் காணி, கையேற்கப்படாதிருந்ததுடன் வீடமைப்புத் தொகுதியின் வேலைகளைப் பூர்த்தி செய்து தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியைக் கையேற்று வீடமைப்புத் தொகுதியின் வேலைகளைப் பூர்த்தி செய்து தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய காணியைக் கையளிக்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. |
| (ஈ) | 22 வாகன மற்றும் சுகாதார தொழிலாளர்கள் உரிய பதவிகளின் கடமைகளுக்குப் புறம்பான கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | முன்பள்ளி பாடசாலை, நூலகம், சுடலைக்கூடம், மாநாட்டு மண்டபம், பொது மலசல கூடம் மற்றும் இணைந்த நிறுவனங்களில் பாதுகாப்பு சேவைக்காக போதியளவான ஊழியர் தரப்பொன்று காணப்படாமையினாலும் இரண்டு வருமானப் பரிசோதகர்கள் காணப்படாமையினாலும் வருமானத்தைச் சேகரிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (உ) | ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 03 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அகற்றப்பட வேண்டிய வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண இயந்திரப் பணிப்பாளரால் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 03 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஊ) | 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க வர்த்தமானியில் கழிவுப் பொருள் அகற்றும் உபவிதிகளைப் பின்பற்றி கழிவுகளை அகற்றுவதற்காக வரி அறவிடுவதற்கு பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக | கழிவுப் பொருள் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையான பிரகாரம் கழிவுப் பொருள் தளம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் கழிவுப் பொருள் வரி அறவிடப்படும். |

| | | |
|---|---|---|
| கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) மீளாய்வாண்டிற்காக சபை அதிகாரப்பிரதேசத்தில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | நிரந்தர விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக நிலையான விளம்பர அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) சபை அதிகாரப்பிரசேத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 126 தொழில் முயற்சிகள் மற்றும் செல்லுபடிக் காலத்தைக் கடந்திருந்த 28 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் ரூபா 616,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய தொழில் முயற்சிகளை இனங்கண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்க வேண்டும். | இது தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளுமாறு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அது பூர்த்தி செய்யப்பட்டதும் உடனடியாக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) மீளாய்வாண்டிற்காக சபை அதிகாரப்பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி செலுத்த வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | வருடாந்தம் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சபையின் 05 பதவிகளுக்குரிய | மிகைப்பதவியணி பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் | பிரதி பிரதம செயலாளரினால் (ஆளணி பயிற்சி) உள்ளக சமநிலை மூலம் 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் |

| | | |
|---|---|---|
| 40 ஊழியர்களின் மிகையும், 03 ஊழியர்களின் வெற்றிடமும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 9 பேர்களுக்கும் அ.நி.சு 25/2014 இன் மூலம் நிரந்தமாக்கப்பட்டுள்ளனர். மிகுதி 23 பேர்களும் அமைய, நாட்கூலி, ஒப்பந்த அடிப்படையிலுள்ளவர்களாகும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இனங்காணப்பட்ட 76 காணிகளை அளவிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு நில அளவினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்குரிய காணிகளை அளவை அளவிடும் நடவடிக்கைகளைச் செய்து காணிகள் ஒதுக்கிக் கொள்ளப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தீர்வுகாணப்பட்டதாக இனங்காணப்பட்ட காணிகளை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட வேண்டும். | எரிபொருள் எரிவைப் பரிசோதனை செய்வதற்கு பல தடவைகள் முயற்சி செய்திருந்த போதிலும், மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் டிப்போ பொறியியலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் பாதீடு தயாரிக்கப்பட்டு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 04 வருமான விடயங்களில் 12 சதவீதம் முதல் 48 சதவீதம் வரையும், 08 செலவின விடயங்களில் 13 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | சாத்தியமான பாதீடொன்றைத் தயாரித்து காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகள் அடையப்பட வேண்டும். | சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் சபையின் இயந்திரப் பொறிமுறைகளை ஈடுபடுத்தி வேலைகள் நிறைவேற்றப்படுகின்றமையால் இயந்திர பொறிமுறைகளில் இருந்து எதிர்பார்த்த வருமானம் பெறப்படாதிருந்ததுடன் சுடலைக்கூட வருமானமும் எதிர்பார்த்த மட்டத்தில் கிடைக்கப்பெறாதிருந்ததுடன் தீர்க்கப்படாதிருந்த பங்களிப்பு ஓய்வூதியம் தீர்க்கப்பட்டமையால் இந்த முரண்கள் ஏற்பட்டிருந்தன. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் செய்யப்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட போதும், முழுநேரமும் அந்த செயற்பாடுகளை மேற்கொள்ள |

| | | |
|---|---|---|
| | | முடியாதிருந்தமையால் 2019 ஆம் ஆண்டின் போது சரியான பிரகாரம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்தல் வேண்டும். | குழுவொன்று தனியாக காணப்படாதிருந்த போதிலும், மொனறாகலை மாவட்டத்தின் சகல பிரதேச சபைகளும் ஒன்றிணைந்து காலாண்டிற்கு ஒரு குழுக் கூட்டம் வீதம் நடாத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |